(Registered as a Newspaper in Ceylon)
P. M. G. No. H. A. 59/300 of 1939.

யுத்தநாலப்பிரசுரம்

உ
சிவமயம்.

விரோதிஸ்ரீ(1889) ஆவணி ஸ்ரீ உஅ! உ" ஆரம்பமானது

# இந்துசாதனம்

**பத்திரக்கிரயம்**

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசம்பளாங்கைக்குள்
தமிழ் ரூபா 5.00 — இங்கிலீசும் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 — இங்கிலீசும் தமிழும் 12.00
தொடுவாய்ப்பகுதி 9.00 — இங்கிலீசும் தமிழும் 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பிலைவிற்கீ கவனிக்கப்படமாட்டா.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

—அப்பர் சுவாமிகள்

**விளம்பர விகிதம்**

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10.00 — அரைக்கலம் ரூபா 5.50
கால்கலம் ரூபா 4.00 — ஒருஅங்குலம் ரூ. 1.00
அடுத்தமுறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி
காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

[ புத்தகம்—ருக ] யாழ்ப்பாணம்: — பிரமாதி ஸ்ரீ கார்த்திகைமீ உஉ (1939 டிசம்பர் 7 வியாழக்கிழமை) [ இலக்கம் கூசு

## யுத்தசமாச்சார வியாக்கியானம்

### 11-வது பிரசங்கம்

30-11-39 இரவு 6½ மணியளவிலே
திரு. பண்டிதர் ந. சி. கந்தையா அவர்கள்பேசியது
21-11-39 தொடக்கம் 30-11-39 வரையும் நடந்த நிகழ்ச்சிகள்

யுத்தம் ஆரம்பித்த இரண்டாவது வாரம் கடற்படைத் தலைவர் திடீர் ஹேக் உடன்படிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டார். ஹேக் உடன்படிக்கையில் சேர்மனி கைச்சாத்திட்டிருக்கின்றது. ஹேக் ஒப்பந்தத்தின்படி, யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு தேசம் எதிரியின் தேசக் கரைகளிலோ வியாபாரப் போக்கு வரத்தைத் தடை செய்யும் நோக்கமாகக் கடற் சுரங்கங்களை வைத்தல் கூடாது.

யுத்தம் ஆரம்பித்த 11-வது வாரம் சேர்மனி ஹேக் ஒப்பந்தத்தை மீறி வடகடலின் கப்பற்பாதைகளில் சுரங்க வெடிகளை விதைத்தது. இவ்வெடி உடன்படிக்கைக்கு மாத்திரமல்லாமல் சர்வதேச சட்டத்துக்கும் முரணானது. இதனால் நடுநிலைமை நாடுகளும் நேய தேசங்களும் பல கப்பல்களை இழந்தன. சைமன் பொலிவார் என்னும் 8000 தொன் நிறையுள்ள டச்சுக் கப்பல் ஆழ்ந்தது. யப்பான் 12,000 தொன் நிறையுள்ள ஒரு கப்பலை இழந்தது. நோர்வே சுவிடின் தேசங்களின் சிறிய கப்பல்கள் கடலில் மூழ்கின. கிப்சி என்னும் காசகாரிக் கப்பல் சுரங்க வெடியில் அகப்பட்டுக் கடல் ஆழத்திற் சென்றது. பொலவாளட் என்னும் குறுவிஸர்க்கப்பலசேதமடைந்தது. ஆனால் உயிர்ச்சேதமொன்றும் ஏற்படவில்லை. இவ்வகையான பயங்கரச் செயல்களுக்கேற்ற பதில் நடவடிக்கை எடுக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. பிரித்தனின் கிழக்குக் கரைகளில் நூற்றுக் கணக்கான சுரங்க வெடிகள் திரைகளால் ஒதுக்கப்பட்டன. இதனால் கடல் நிலைமை எவ்வளவு மோசமாகி விட்டதென அறியலாம். இச்சுரங்க வெடிகளெல்லாம் சேர்மன் நீர்மூழ்கிகளாலும், கடல் விமானங்களால் பாருட் மூலமாகவும் விதைக்கப்பட்டவை. கடற்சுரங்கங்களை இன்னும் அதிகப்படுத்துவதே ஹிற்லரின் நோக்கமெனப் பிந்திய செய்திகளால் தெரிய வருகின்றது.

திரு. சேம்பலின் கொமன்ஸ் சபையிலே பேசினார். அப்பொழுது அவர் குறிப்பிட்டதாவது.- "சேர்மனி இப்போ கடூரச் செயல்கள் புரிந்து வருகின்றது. இச்செயல்கள் சேர்மனி செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறிச் செய்யப்படுவனவாகும். இது சம்பந்தமாக அந்நியரக் கப்பல் ஆழ்த்தப்பட்டதையும் பிரிட்டிஷ், நேச, நடுநிலைமைநாடுகளின் கப்பல்களைச் சுரங்கவெடிகள், டோர்ப்பிடோ பிரங்கிப் பிரயோகங்களால் ஆழ்த்திவருவதையும் குறிப்பிடுகின்றேன். இச்செயல்கள் முன்னெச்சரிக்கையின்றியும், நீர்மூழ்கிக் கப்பற் சட்டங்களை மீறியும் நடந்திருக்கின்றன. சேர்மனி மிருகத்தனமாக நடந்து வருகின்றது. இவ்வகையான செயல்களுக்கு நாம் பழிக்குப்பழி வாங்காமல் இருக்க முடியாது. சென்ற மகாயுத்தத்திலே நீர்மூழ்கிகள் வியாபாரக் கப்பல்களைத்தாக்கி நாசஞ்செய்தன. இதற்குப் பதில் நடவடிக்கையாக சேர்மன் ஏற்றுமதிச் சாக்குகள் தடுக்கடலில்வைத்துப் பறிமுதல் செய்யப்பட்டன. இப்பொழுது சேர்மனி சர்வதேச சட்டங்களை மீறுவதும், அநுகாரணமாக, சென்றயுத்த நடபடிமையே இப்பொழுதும் நாம் கையாளத்தீர்மானித்திருக்கிறோம்.

மார்கழி 4-ம் தேதிக்குப்பின் சத்துரு துறைமுகங்களிலிருந்து புறப்படும் கப்பல்களிலுள்ளனவும் இதரதேசத் துறைமுகங்களிலிருந்து மார்கழி 4-ம் தேதிக்குப்பின் ஏற்றுமதி செய்யப்படுவனவுமாகிய சேர்மன் சரக்குகள் தடைசெய்யப்பட்டிருப்பதாக தேசதேசங்கள் சட்டம் பிறப்பித்திருக்கின்றன.

செரலாந்து, கிழக்குக்கரை,தேம்ஸ் நதியின் வடபுறம் ஆகிய இடங்களிலே சேர்மன் விமானங்கள் 23 முறை பறந்தும் குண்டுகளை வீசியும் இருக்கின்றன. பல விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. மற்ற விமானங்கள் வெருட்டியடிக்கப்பட்டன. மேற்குப் போர்முனையில் அடிக்கடி ஆகாயப்போர் சுமுகமாக நடைபெறுகின்றது. ஒரு நாளிலே 7 சேர்மன விமானங்கள் மாத்திரம் சுட்டு வீழ்த்தப்பட்டன. இவ்வகையான யுத்தமேயன்றி நிலத்திலும் கடலிலும் வேறு யுத்தம் நடைபெறவில்லை. ஆனால் வியாபாரத்துறையிலே பெரியுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதுசாதிகளின் சில ஓட்டத்தைக் குறைக்கத் தக்கது.

1914-ம் வருடத்திலே பிரித்தினும் பிரான்சும் பெல்சியத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகச் சேர்மனிக்கு மாறாகப் போராடின. காலடைவிலே சாரியம் மிஞ்சி உலகமுழுதும் யுத்தத்தில் இழுக்கப்பட்டது. அம்மகா யுத்தத்தில் பிரித்தினுக்கு, பிரான்ஸ் இத்தாலி ஐக்கிய அமெரிக்கா முதலிய நாடுகள் தோள கொடுத்தன. ஒரு லட்சம் பிரிட்டிஷ் பிரசைகள் உயிர் துறந்தனர். 1918 லே சேர்மனி முறிய அடிக்கப்பட்டது. அதனால் ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி சேர்மனி தனது இராணுவத்தைக் குறைக்கும்படியும் போலிஷ் போன்ற சேர்மனியரல்லாதாரின் பரிபாலனத்தை ஒழிக்கும்படியும் திருப்பதிக்கப்பட்டது.

சென்ற மகாயுத்தம் "யுத்தங்களை ஒழிக்கும் யுத்தம்" என்று கருதப்பட்டது. ஒரு தேசம் பலாத்காரத்தினால் இன்னொரு சாதியை இனியொருபோதும் பணிய வைக்காது என நாமெல்லோரும் நம்பினோம். 1918-ம் வருடத்தின்பின் சில வருடங்களாக நாம் எண்ணியதுபோல் நடக்கும்போலத் தோன்றிற்று. பிரான்சும் பிரித்தினும் தமது தரைப்படை கடற்படை ஆகாயப்படைகளை இராணுவக்குக் குறைத்தன. அது மிகவும் அபத்தான செயலென்று இப்போ தெரிகின்றது. செக்கர், சிலோவேக்கியர், பொலிஷர் முதலியோர் பிறர் ஆளுகையினின்றும் விடுபட்டுத் தம் இஷ்டமான ஆளுகையை ஏற்படுத்திக் கொண்டு சமாதானமாக வாழலாம் என்றும் நம்பினர். இனிமேல் பலாத்காரத்துக்கு இடங்கொடுக்க மாட்டோம் என்று உலகிலுள்ள பெரிய சாதிகளெல்லாம் கையொப்பமிட்டன. சாதிகளுக்குள்ளே பிணக்கு ஏற்பட்டால் பேச்சு வார்த்தைகள் மூலம் சமரசப்பட்டு விடுவதாக அவர்கள் உறுதி கூறினர்.

தமது ஆட்சித் தலைவராலே தொடுக்கப்பட்ட யுத்தம் பிழையானதென்று சேர்மனியர் கருதினர். அப்போர் வறுமைக்கும் பசிபட்டினிக்கும் 2 லட்சம் சேர்மனியரின் மரணத்துக்கும் ஏதுவாயிருந்தது. கேய்சர் சேர்மனியைவிட்டுத் தப்பி ஓடினர். சேர்மனியில் முடியாட்சி போய்க் குடியாட்சி ஏற்பட்டது.

1933 லே ஒரு மாற்றம் ஏற்பட்டது. 1931 ல் எல்லாத் தேசங்களிலும் நிகழ்ந்தது போலவே சேர்மனியிலும் விலை விழுந்தது. இதைத் தருணமாகக் கொண்டு ஹிட்லரும் சிட்டருமாகிய நாசிகள் அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றிச் செல்வாக்கடைந்தனர்.

ஹிட்லரின் சரித்திரத்தை எல்லோரும் அறிவர். அவர் வியன்னாவில் வீடுகளுக்கு வெள்ளையடிக்கும் தொழிலில் ஆரம்பித்தார். பின் யுத்தத்தில ஒரு பட்டாளத்துக்குத் தலைவராயினார். பின் தனது நாசிக் கொள்கையைப் பரப்பினார். நாசிக் கொள்கையென்றால் என்ன என்பதை "எனது நினைவுதல்" எனப் பெயருள்ள நூலிலே தெளிவாக விளக்கியிருக்கிறார்.

நாசிக் கொள்கையின்படி "நோடிக்ஸ்" என்னும் உயர்ந்த சாதி ஒன்று உண்டு. சேர்மனியர் தாமே உலகத்தில் உயர்ந்த நோடிக் சாதியார் எனக் கருதுகின்றனர். நோடியராகிய தமக்குத் தமது கொள்கைகளை உலகிலுள்ள எல்லோரிடமும் புகுத்த அதிகாரமுண்டு என அவர்கள் நினைக்கின்றனர். "நோடிக்ஸ்" அல்லாத மற்றச் சாதியாருக்கிடையில் தமது ஆதிக்கம் இருக்க வேண்டுமென்பது அவர்களது கொள்கை. அவர்களுக்குத் தேசமே எல்லாமாக இருக்கின்றது. தனிமனிதன் கவனிக்கப்படமாட்டான். தனிமனிதனின் பேச்சுச் செய்கை அபிப்பிராயங்களுக்குஇடங் கிடையாது. தேசத்தின் அதிகாரம் முழுவதும் ஒரு தலைவனிடத்தில் இருக்கிறது. அவன் சொல்வதே சட்டம், மற்றவர்கள் ஏன் என்று கேள்வி இல்லாமல் அவன் சொல்வதற்குக் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும். இக்கொள்கையை அநேகர் விரும்புகின்றனர். ஒரு அரசாங்கம் இன்னொரு அரசாங்கத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளைநிறைவேற்றும், நாசிக் கொள்கையின்படி ஒரு வாக்குறுதி ஒருவருக்கு எவ்வளவு காலத்துக்குச் சாதகமாக இருக்கின்றதோ அவ்வளவு காலத்துக்கே அவர் அதைக் காப்பாற்ற வேண்டும். இவ்வகையான பிலேச்சகொள்கை உலக சரித்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### திருக்குறும்பலா
### பண் காந்தாரம்

கொம்பார் பூஞ்சோலைக் குறும்பலா
மேவிய கொல்லேற் றண்ணல்
கம்பா னடிபரவு நான்மறையான்
ஞான சம்பந்தன் சொன்ன
இன்பாய பாட லிவைபத்தும்
வல்லார் விரும்பிக் கேட்பார்
தம்பால தீவினைகள் போயகலு
நல்வினைக ளடரா வன்றே.

சம்பந்த சுவாமிகள்

## புரவலர் புகழும் பாவலர்பண்பும்

திரு.கா. சிவபாதசுந்தரம், தொல்புரம்

(முற்றொடர்)

ஔவை அவன் இந்த கனியைப்பெற்று

"போரடு திருவிற் பொலந்தாரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத லின்னகத் தடக்கிச்
சாத லீந்த வெமக்கீத் தனையே"

என அவனை வாழ்த்திய புறநானூற்றுச் செய்யுளையுங் காண்க. என்னே! பாவலர் பண்பு!! பகைவர்களை அமர்க்களத்திற் கொல்லும் வீரச் செல்வத்தையும் பொன்னாற் செய்யப்பட்ட மாலையினையுமுடைய அஞ்சி! பெரிய மலையின் விடரிலுள்ள உச்சியினின்றும் நீகொண்ட நெல்லிக்கனி பெறுதற்கரியதாயினும் சாவை நீக்கும் என்பதை எமக்கு உரையாதுகின்னுள்ளே யடக்கி யாம் இறப்பொழிய எமக்கீந்தாயாதலின் பிறைச்சந்திரனையுடைய சடையையும் நீலகண்டத்தையும் உடைய சிவபிரான் சாதற்குக்காரணமாகிய நஞ்சுண்டு நிலைபெற்றது போல நீயுஞ் சாவாதிருத்தல்வேண்டுமென வாழ்த்தினார். இச் செய்தியை,

"பூங்கமலவாவிசூழ் புள்வேளூர்ப் பூசனையு
மாங்குவருபாற் பெண்ணையாற்றினையு — மீங்கு
மறப்பித்தாய் வானிகா வன்கூற்றி னவை
யுறப்பித்தா யாலகத் தந்த"

என்று தனிப்பாடலிலும் ஔவை சாற்றுகின்றன.

செந்தமிழ் மணம் சந்ததமும் வீசப்பெற்ற முதிரமலையடுத்த நாட்டைக் குமணன் ஆண்டான். அன்னான் முதிர்ந்த அறிவை உடையவன் இரவலர்க்கு இன்புடன் கொடுக்கும் புரவலன் பாவலர் மிடிக்குப் பகைஞன், நாவலரும் பாவலரும் போற்றும் புரவலன். பாவலரைக் கண்டவுடன் அகமலர்ச்சி கொண்டு எதிர்கொண்டழைத்து அறுசுவை அமுது அருத்திப் பின் தண்டமிழ் மொழியின் இனிய ஓசை, அரிய அமைதி, எழுத்து, சொல்நயம், பொருணயம் முதலிய் பண்ணயங்களைப்பற்றி நெடுநேரம் உரையாடிப் புலவர்மாட்சி உணர்ந்து வியந்து அகமகிழ்ந்து பாவலர் மிடியெலாம் அடியோடு தொலையப் பொன்னும் மணியும் வரையாது கொடுக்கும் வன்னன்மை வாய்ந்தோனுக் காணப்பட்டான். இத்தகைய புரவலனது தம்பி வஞ்சனைச் சூழ்ச்சியால் தமயனைக் காடு சேர்த்தான்.

"குமணனும் பெருந்தலைச் சாத்தனும்: புலவர்க்கேற்ற புரவலனுன புனிதக் கோமான் குமணவள்ளல் "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்ற மொழிப்படி காடுறைதல் காடுறைதலினும் இனிதாகக் கொண்டு இருந்து வருவானாயினன்.

இவ்வாறிருக்க கல்விச் செல்வக் கடல் கடந்தும் செல்வக்கடல்கடக்க வகைகாணுது அல்லலுற்ற பெருந்தலைச் சாத்தனார் என்னும் பெரும்புலவர் தமது மிடி தீரப் பரிசில் பெற்று வரலாம் எனக் கருதி குமணன்றன் நாட்டைநோக்கிச் சென்றார். ஆனால் ஆண்டு நடந்ததை அறிந்து நெடுந்துற்றுக்கலங்கி அருங்குணச்செம்மல் இருக்கும் காடுநோக்கிச் சென்றார். காட்டில் குமணனைக்கண்டார், காணலும் களிப்புற்று புலவர் குறை தீர்க்கும் புரவலனே! வாழியவாழிய!!என்றுவாழ்த்தினார். வாழ்த்தொலி கேட்ட வள்ளல் புலவரைக் கண்ணுற்று செந்தமிழ்ச்செல்வீர் வருக!வருக!! சானறை வாழ்க்கை கொண்ட கடையேனிடம் கருதிவந்தது யான் முன் செய்த தவப்பயன்தான் என்னேயோ! என்றார். வள்ளலை நோக்கிப் புலவர் செந்தமிழ்ச் சுவையில் கன்றுணருஞ் செமமால் சிரியன்னலே!

"ஆங்கனி மறந்த கோடியர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி உழவாப்
பாலில் இன்மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத் தொ றழூஉந்தன் மகத்துமுகம் நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கணென்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந்திசினே நற்போர்க் குமண!

என்று கூறித் தமது வறுமை நிலைமையை விளக்கி வருந்தினின்றார்.

செவியுற்றகுமணன்தியங்கினன் பாவம் என் செய்வான்? பல பல யோசித்தும் ஒன்றுங் கையிலில்லை என்பதை உணர்ந்தான். இரவலன் தன் தலைக்குக் கோடி பொன் கொடுப்பதாய்ப் பறையறைவித்து நினைவிற்கு வாளும் அகமகிழ்ந்து

அந்தரான் வந்திலீர் அருந்தமிழ்ப் புலவீர்!
இந்தரான் வந்தீர் சொந்தனி நடைந்தீர்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றும் வறுமைநோய் களைமின்

என்று கூறிப் புலவர் கரத்தில் தன் உடைவாளைக் கொடுத்தனன்.

என்செய்வார்புலவர் இந்நிலையில் தடித்தார்! வெருண்டார்! வள்ளல் தலையினை வாளால் கொய்ய ஒருப்படுவரோ புலவர் சிகாமணி! உடனே வாளை வேண்டினர். தலைக்கொடையாளியே! ஓரிடத்திலும் நிலைத்திரா இச் செல்வத்தின் பொருட்டோ யான் நின்தலை தணிப்பது? அதிலும் அழியாப்பழி வேறுண்டோ? என்று புகழ்ந்தார். பின் புலவர் சிகாமணி அமணனிடஞ் சென்று அவனுச்குச் சகோதர வாஞ்சையை எழுப்பிக் குமணனையும் மறுபடி நாடாளும் சுற்பதம் கொடுத்து அமணனை மூத்தோன் ஏவல் செய்யும்படியும் பணித்தார்.

தம் தீரா வறுமைப்பிணி போக்கத்தக்க நன் மருந்து பெறவந்த புலவர் பண்பு உன்னுந்தோறும் உவகை பொங்கும். மற்றும் குமணன் செங்கோல் கொள்ள மறந்தபோது அவன் மாற்றம் உரையா வண்ணம் முடிபுனைந்த பாவலர் ஆற்றலும் வியக்கத்தக்கது. இதுவே புரவலர் பெருமைக்கும் பாவலர் பண்புக்கும் போதிய சான்றாகும். வேறு வேண்டுவதென்ன?

### முடிவுரை

ஆதலால்வாசகர்களே! இவ்வாறு தமிழ் மன்னரும் தலைவரும் போற்ற வாழ்ந்த புலவர்கள் செந்தமிழ்மொழியில் செவ்விய நூலியற்றிப் புரப்போர் பெருமையைப் பொன்றாது நிலைநிறுத்தினர்கள். நிற்க, ஆ! தற்காலப் பாவலர்கள் எங்கே? அவர்கள் யாண்டுள்ளனர்? அவர்கள் பட்டத்திற்கும் பதவிக்குமே பிறந்தார்கள் போலத் தோற்றுகின்றார்கள். தமிழ்நாட்டில் பிறந்து, தமிழ்நாட்டில் வளர்ந்து, தமிழ் நாட்டைத் தாய்நாடாகக் கொண்ட நாம் தமிழை நுகர்கின்றோமா? இல்லையே! காரணம் என்ன? உரிமைஇழந்தோம்! தமிழை மறந்தோம்! பாவலர்களை இழந்தோம்! ஆ! என்னரிய சோதரர்களே! பிறமொழிகள் முளைப்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தோன்றி முடியுடை வேந்தர் பலரால் வளர்க்கப்பட்டுச் சொல்வளத்தாலும், பொருட்பெருக்காலும், ஓசையொழுக்காலும் ஒப்புயர்வின்றி ஒளிர்ந்த தமிழரசி இன்றுள்ள நிலையை எண்ணிப் பாரீமின்! அந்தோ! செந்தமிழ்நன்மக்களே! நம் அரும்பெறல் அன்னை வள்ளுவர், நக்கீரர், சேக்கிழார், கம்பர், சிவஞானமுனிவர், நாவலர் முதலிய அறிவறிந்த மக்களைப் பெற்றும், இங்ஙனம் தனது வீறு குன்றியிருத்தலைக் கண்ணாரக்கண்டும் வாய் வாளாமை மேற்கொண்டிருத்தலான்றோ? இளைஞர்களே! தண்டமிழணங்கின் நல்லருள் மிக்கப்பெற்றுக் கண்ணியம்வாய்ந்த தமிழ்நாட்டில் நற்றமிழுணர்வும் நற் சைவ போதமும் குன்றாது உழைப்பீர்களாக!

"வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே."

### தேவை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்க் கலவன் பாடசாலைக்குத் தமிழ் ஆசிரிய தராதர பத்திர முடைய ஓர் உதவி ஆசிரியை தேவை.

விண்ணப்பப் பத்திரங்கள் 1939-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ந் திகதி வரை அங்கீகரிக்கப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் யா. இ. க. மனேஜருக்கு அனுப்பப் படவேண்டும்.

Mis 198 27-11—7.12-39

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழக தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமாதி ஸ்ரீ கார்த்திகைமீ ௨௨உ வியாழக்கிழமை

## ஜே. எஸ். ஸி. பரீட்சையில் நேர்ந்த விபரீதம்

சென்றவாரம் நடந்த ஆங்கில ஜே.எஸ்.ஸி.பரீட்சையில தமிழ்ப் பாட விஷயமாகக் கொடுக்கப்பட்ட வினுப்பத்திரத்தையிட்டு இங்குள்ள பன்னூற்றுக் கணக்கான மாணுக்கர்களும் இப்பரீட்சைக்குரிய மாணவர்களை வைத்துப் படிப்பிக்கும் கல்லூரி கலாசாலைகளின் ஆசிரியர்களும் பெரிதும் வருந்தி முறையிடக் கேட்டுள்ளோம்; அவ் வினுப்பத்திரத்தை நாமும் நேரிற் பார்த்துள்ளோம்; மேற்படி பரீட்சைக்குத் தமிழ்ப்பாடமாக விதிக்கப்பட்ட புத்தகங்கள் சிசுபாலசரித்திரமும் நளவெண்பாக் கலிதொடர் காண்டத்தில் முதல்நூறு செய்யுளுமேயாகும். ஆனல் அந்த நூறு செய்யுட்களும் அதிகமென்ற காரணம்பற்றியோ, இல்லையேல் வேறு நியாயத்தையிட்டோ, நாமறியோம், வித்தியாபகுதியார் 100 செய்யுட்கள் வேண்டியதில்லை, காப்புச் செய்யுட்கள் தவிர 73 செய்யுட்கள் போதுமென இடையில் ஒரு சுற்றுநிருபம் விடுத்துத் தலைமையாசிரியர்களாயுள்ளார்க்குத் தெரிவித்துவிட்டார்கள். இடையில் வந்த சுற்றுநிருபத்தின்படி தமிழ்ப்பண்டிதர்கள் சுன்னுகப் பதிப்புப் பிரதியின்படி 57-ம் பாட்டுத் தொடக்கம் 130ம் பாட்டுமுடியவுள்ள 73 பாட்டுக்களையுமே அவதானமாகப் பிள்ளைகட்குப் பயிற்றி வந்தார்கள்.

இப்படியாகச் சென்ற வியாழக்கிழமை பின்னேரம் மாணவர்க்குப் பரீட்சை மண்டபங்களிற் கொடுக்கப்பட்ட தமிழ்ப் பாட வினுப்பத்திரத்தில் நளவெண்பாவிற்குரிய கேள்விகள் குறித்த 73 கவிகளுக்குள்ளும் அடங்காதனவாக, அவற்றிற்கப் பாலுள்ள கவிகளைக் குறித்த வினுக்களாகக் காணப்பட்டன. பரீட்சார்த்திகள் கனவிலுங்கருதாத, எதிர்பார்த்திராத, சிறிதும் ஆயத்தப்படுத்தாத இக் கேள்விகளைக் கண்டமாத்திரத்தே செய்வதின்னதென் றறியாது பலர் விடையெழுதாதொழியச் சிலர் தாம் விளங்கியபடி சரியாகவோ பிழையாகவோ எழுதிவிட்டதாகச் சொல்லிக் கவலைப்படுகின்றார்கள். மேலும் இந்தத் தமிழ் வினுப்பத்திரம் இதற்கு முந்திய வருடங்களிற் கொடுக்கப்பட்ட வினுப்பத்திரங்களோடு இயல்பில் முழு விரோதமானதாகவும் கடுமையானதாகவுங் காணப்படுகின்றதாம். நளவெண்பாவில் அவையும் பரீட்சைக்கு விதிக்கப்பட்ட கவிகளுக்கப்பால் இரு கவிகளின் தாற்பரியத்தை மாத்திரஞ் சொல்லிவிட்டு அக்கவிகளை எழுதென்ற கருத்துப்பட ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கின்றது. பிள்ளைகள் இக் கவிகளை முந்தியே மனனஞ் செய்திருந்தாலொழியச் சரிவர எழுதுதல் அசாத்தியம். இப்படியான வினு முன்னெக்காலத்தாயினும் இப் பரீட்சார்த்திகளை வினுவியதில்லையென்பது முந்திய ஆண்டுகளில் வெளிவந்த வினுப்பத்திரங்களைக் கொண்டு அறிதல் முடியும். மேலும் இப் பரீட்சைக்குரிய பாடத்திட்டப் பாக்களை மனனஞ் செய்ய வேண்டுமென்று எழுதப்படவில்லை. இதனுற் பிள்ளைகள் இக் கேள்விக்கும் விடையெழுத முடியாதவராயினர்.

இனி, தமிழ் வசனத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் விஷயத்தில் இலகுவான வசனத்திற் சில வரிகளை மொழிபெயர்க்கும்படி வினுவுதலே இதுகாறும் நடந்துவந்ததாக, இந்த முறை நளவெண்பாவில், (அவ் வெண்பாவும் பரீட்சைக்குவிதிக்கப்பட்ட பாட்டுக்களுக்கப்பாலுள்ளதென்றே நினைக்கிறேம்) கற்பனைகளோடு கூடிய ஒரு கவியைக் கொடுத்து அதனையே மொழி பெயர்க்கும்படி பரீட்சகர் வினவியிருக்கின்றார். இதனையும் எல்லா மாணவருஞ் செய்தல் இயலாதெனலாம். மேலும் இப்படி விதித்த எல்லைக்கப்பாற் கொடுக்கப்பட்ட வினுபாக்கள் நளவெண்பாப் புத்தகத்தில் ஒரே பக்கத்திற் காணப்படுகின்றன. இவைகளையெல்லாம் ஆராய்ந்துபார்க்கும்போது இத்தமிழ்க் கேள்விகளைத் தெரிந்து வரைந்த பரீட்சகர் இப்பரீட்சையின் நிபந்தனைகளையும் பாடத்திட்டத்தின் இயல்பையும் பரீட்சிக்கும் முறையையும் அநுபவத்தில் அறியாத புதியரென எண்ணக்கிடக்கின்றது. அவர் எப்படிப்பட்டவராகட்டும், அவரையிட்டு நாம் ஏதுஞ் செல்லவரவில்லை.

இலங்கையிலே தமிழ்ப்பிள்ளைகளாயுள்ளாருட் பெரும்பாலர் இந்த ஜே எஸ்.ஸி. பரீட்சைக்கு உபமொழிப்பாடமாகக் கைக்கொள்வது தமிழையேயாகும். யாழ்ப்பாணத்து மாணவருள் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது விகிதமானேர் தமிழையே உபபாஷையாகக்கொள்வரென்று சொன்னலும் தவருகாது. இவர்கள் தங்கள் தமிழ் பாடப் பரீட்சையிலே தவறுவார்களாயின் முழுப்பரீட்சையிலும்தவறியவர்களாக மதிக்கப்பட்டுச் சித்தியடையாதொழிவர். ஏனைய பாடங்களிற் சித்தியடைந்தும் பயனில்லையாம். பானை சட்டி பன்னும் குயவனுக்குப் பல நாள் வேலை தடியடிகாரனுக்கு ஒரு நிமிடச் சிரமம் என்றவிகமாக, பெரும் பொருள் செலவிட்டுச் சிரமப்பட்டுப்படித்த பிள்ளைகட்குப்பரீட்சைக்காலத்திற்சிறிதும் யோசனையின்றி ஒருபரீட்சகர் இப்படி விபரீதம் விளைத்துவிட்டால் இதனுல் மாணுக்கருக்கும் உபாத்தியாயர்கட்கும் பெற்றாருக்கும வருவதாகிய மனத்தாபத்திற்கும் நஷடத்திற்கும் யார் பொறுப்புள்ளவரென்பதுதான் கேள்வி. இப்படி நேர்ந்தபிழையை விரைவில் நிவிர்த்தி செய்யும்படி வித்தியாமந்திரி வித்தியாதிகாரி வித்தியாசங்கத்தார் சனப்பிரதிநிதிகளாகிய எல்லாரையும் விநயமாகக் கேட்கின்றேம்.

### இந்துசாதன ஐக்கியசங்க வருடாந்தக் கூட்டம்

இந்துசாதன ஐக்கியசங்கத்தின் 13ம் வருடாந்தக்கூட்டம் மேற்றுமாலை 4 மணியளவில் இந்துசாதனக் காரியாலயமண்டபத்தில் நடைபெற்றது. திரு. S. தகுலிங்கம் அவர்கள் தலைமை வகிக்கத் தேவாரபாராயணத்தோடு கூட்டம் ஆரம்பமாயிற்று. காரியதரிசி தனுதிகாரி ஆகியோரின் அறிக்கைகள் படித்துச் சபையாரால் அங்கீகரிக்கப்பட்டன.

புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு வருமாறு:-

தலைவர் திரு. S. தகுலிங்கம்.

உப தலைவர்: திரு. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை.

காரியதரிசி திரு. T. செல்லையா.

தனுதிகாரி திரு. K. நமசிவாயம்.

நிருவாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள் க. இ. நடராஜன், மு. சுதிரவேலு, சு. இராமலிங்கம், N. மயில்வாகனம், P. கனகசபை.

இறுதிச் சபையோருக்குச் சிற்றுண்டி முதலியவை பரிமாறப்பட்டன. தேவாரபாராயணத்தோடு கூட்டம் இனிது நிறைவேறியது.

# சுதந்திரம் பெறவே ராஜிநாமாச் செய்தோம்

## 'மனச்சோர்வு வேண்டாம்' ஊழியர் கவனிக்க வேண்டியவை

பம்பாய், நவ 29

சென்னைப் பழைய பிரதம மந்திரி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாருக்கும், மைசூர் சமஸ்தானக் காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ செங்கல்வராயசெட்டிக்கும் பம்பாயிலுள்ள தென்னிந்தியர்கள் மாதுங்காவில் ஓர் உபசரிப்பு நடத்தினர். சர்தார் படேல் தலைமைவகித்தார். அவர் கூறியதாவது:-

### சர்தார் படேல்

காங்கிரஸ் மந்திரிகள் ராஜிநாமாச் செய்த காரணத்தை யாவரும் அறிவர். இந்தியா விஷயத்தில் பிரிட்டிஷ் யுத்த நோக்கம் எவ்விதம் நடைக்குக் கொண்டுவரப்படும என்பதைத் தெளிவாக அறிவிக்கும்வரை யுத்த விஷயத்திற் காங்கிரஸ் கலந்துகொள்ளமுடியாது. இதனுல் காங்கிரஸ்காரர்களுக்கு வேறு வேலையில்லையென நினைக்கக்கூடாது. ஹரிஜனவேலை, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைவேலை கதர்த் தொழில் கிராமக் கைத்தொழில் வேலை முதலியவற்றைக் கவனிக்கவேண்டும். காங்கிரஸ்காரர்கள் தங்களுக்கிடையேயுள்ள எல்லா வித்தியாசங்களையும் விட்டொழிக்க வேண்டும். இந்த நெருக்கடியில் யாவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்.

### ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்

பிறகு ஸ்ரீமான் ஸி. இராஜகோபாலாச்சாரியார் தமிழில் வேடிக்கையாகப் பேசினர்.

காங்கிரஸ் சரித்திரத்திற் பதவியேற்பு விஷயம் ஒரு சிறு அம்சமாகும். காங்கிரஸ் மந்திரிகள் விலகிவிட்டார்கள் என்பதற்காக ஒருவரும் மனச்சோர்வோ, ஏமாற்றமோ அடையவேண்டாம். நாட்டின் சுதந்தரத்துக்காக உழைப்பவர்கள் அதனுல் தங்கள் முயற்சியைக் குறைத்துக்கொள்ளக் கூடாது.

சுதந்திரம் அடைவதற்காகக் காங்கிரஸ் தலைவர்கள் வகுத்த வழியில் ராஜிநாமாவும ஒன்றாகும். இந்தச் சமயத்தில் யாவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டு மென்பதை நானும் மனப்பூர்வமாக அங்கீகரிக்கிறேன். இதுவரை செய்தது போலவே, இங்குள்ள தென்னிந்தியர்கள் கட்டுப்பாடாகக் காங்கிரஸை ஆதரிக்கவேண்டும். அவர்கள் பதவியில் இருந்தாலும் சரி வெளியே இருந்தாலும் சரியே.

## அநுராதபுரப் பட்டின சபை

### 5ம் முறையாகவும் மாதாந்தக் கூட்டம்நடைபெறமுடியவில்லை

அநுராதபுரம், டிச 4—

நேற்று முன்தினம் அநுராதபுரப் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் நடைபெற ஒழுங்குசெய்யப் பட்டிருந்தது; ஆயின், 'கோரமில்லாக் காரணத்தாற் கூட்டம் கலைந்து போக நேரிட்டது. இவ்வாறு கூட்டம் கலைந்தது இம்முறையுடன்5வது முறையாகும்.

கூட்டம் கூடுவதற்காகக் குறிக்கப்பட்ட நேரம் காலை 9 மணி. இந்நேரத்திற் சுகாதார வைத்திய அதிகாரி டக்றர் எப். ஸி. ஸ்பிற்றலும், ஜனுப் ஏ. எல். எம். ஹனிபாவும் வந்திருந்தனர். ஏறக்குறைய அரைமணி நேரம் சென்று உபதலைவர் திரு. பி. டி. சில்வா சபைக்கு வந்து சேர்ந்தார். சபைத்தலைவர் திரு. எஸ். நடராசா அசௌக்கியமுற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மேலும் மற்றொரு அங்கத்தவர் திரு. எ. சொக்கலிங்கம் இந்தியாவுக்குச் சென்றிருக்கிறர்.

பட்டினசபையின் மாதாந்தக் கூட்டங்கள் இவ்விதம் நடைபெருமலிருப்பதாற் சென்ற செப்டெம்பர் மாதத்திலிருந்து ஏராளமான அலுவல்கள் தடைப்பட்டுப் போயிருக்கின்றன. சனிக்கிழமைக் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பிலுள்ள கடைசி விஷயம் திரு. K. தம்பிப்பிள்ளையை மீண்டும் பட்டின சபையின் வேலைச் சுப்பிரின்டெண்ட் பதவிக்கு நியமிக்கும் விஷயமாகும். இந்த விஷயத்தாற்றுன் சென்ற செப்டெம்பர்மாதக் கூட்டத்திற் சில அங்கத்தவர்கள் தங்கள் ஆக்ஷேபனையைத் தெரிவிக்கும்முறையிற் கூட்டத்தை விட்டு வெளியேறிச்சென்றர்கள்.

## சிங்கள வேலைக் காரனின் திருட்டு

### கோட்டில் எதிரிக்கு 4 மாத மறியற் றண்டனை

—0—

டிச 6உ

மீசாலையில் வசிக்கும் G. கந்தசாமி என்னும் எழுத்தாளருடைய வீட்டில் வேலைக்கு நின்ற T. சைமன் சிங்களவாலிபன் ரூ 65 பெறுமதியான ஒரு பவுண் சங்கிலியைக் களவாடியதாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி திரு. E V. R சமரவிக்கிரம முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதி எதிரிக்கு நாலுமாதக் கடுழிய மறியற் றண்டனை விதித்தார்.

மேற்படி வழக்கின் சாராம்சமாவது:- யாழ்ப்பாணம் டி. ஆர். கி. கச்சேரியில் எழுத்தாளராய் இருப்பவரும் மீசாலையில் வசிப்பவருமாகிய G. கந்தசாமி என்பவருடைய வீட்டில் எதிரி வேலையாளாக நின்றுன். சென்ற நவம்பர் மாதம் 20-ந் தேதி அன்றில் எதிரி கந்தசாமி என்பவருடைய ஒரு வயதுக் குழந்தையைத் தூக்கி வைத்திருந்தான். அப்போது அக்குழந்தையின் அரையிற் சங்கிலி காணப்பட்டது. பின்னர் அக்குழந்தையை வேறொரு வேலைக்காரச் சிறுமி வாங்கியபோது குழந்தையின் அரையிலிருந்த சங்கிலி காணப்படவில்லை. காணுமற் போன சங்கிலியைத் தேடிப் பார்த்தனர். சங்கிலியை எடுத்துக்கொள்ள முடியவில்லை. எதிரிமீது ஐயுறவுகொண்டு பொலிசாருக்கு அறிவித்தனர். பின்னர் இவ் வேலைக்காரனைப் பிடித்துக்கொடுத்த சின்னத்தம்பி செல்லையா என்பவர் கந்தசாமி வீட்டிற்குச் சென்றிருந்தார். இத் தகவலை அவரிடம் அறிவித்தபோது அவர் வேலைக்காரனிடம் விசாரித்தார். அவன் உண்மையைக் கூறி வளவுக்குள் புதைத்து வைத்திருந்த சங்கிலியை அவருக்கு எடுத்துக் கொடுத்தான். ந-தி

## விளையாட்டு நிலத்தில் நாகபாம்பு

பொலகாவலை டிச 4

சனிக்கிழமையன்று அரசாங்கஉத்தியோகஸ்தர் டெனிஸ் கிளப் அங்கத்தவர்கள் சிலர் டெனிஸ் விளையாடிக் கொண்டிருந்தபோது ஏறக்குறைய 3 அடி நீளமுள்ள நாகபாம்பு டெனிஸ் விளையாட்டு மைதானத்தில வேலை செய்யும் சிறுவன் ஒருவனின் கால் மீது நகர்ந்து சென்றது. சிறுவன் பயந்து உடனே ஒரு பக்கத்திற்றள்ளிப் பாய்ந்ததாற் றப்பிக் கொண்டான். குறித்த பாம்பு கண்ணிவிட்டுப் பிடிக்கப்பட்டதன் பின் கொல்லப்பட்டது.

### பல்வைத்திய விளம்பரம்

யப்பானியப் பல் வைத்தியரான எல். இமய் என்பவர் யாழ்ப்பாணம் பெரிய தெருவிலுள்ள திருச்செல்வம் பில்டிங்கில் டிசம்பர்மாதம் 7-ந் திகதி தொடக்கம் 16-ந் திகதிவரையில் பல்வைத்தியம் செய்யும் பொருட்டாகத் தங்கியிருப்பார்.

Mis 208 6-11-39

# தந்திச் சமாசாரம்

### ஜர்மனிய யுத்தக்கப்பல் அமிழ்த்தப்பட்டமை

4-12-39

ஹெலிக்கோலண்டிற்கணித்தாகவின்ற ஜர்மனிய கப்பற்படையில் பிருத்தானிய ஆகாயவிமானிகள் குண்டுபெய்தபோது ஜர்மனிய குருயிஸர்க் கப்பலொன்று தாக்குண்டு சேதமுற்றுக் கடலில் மாண்டுபோனதெனப் பிருத்தானியர் தெரிவிக்கின்றனர். ஆனல் ஜர்மனியர் இவ்விஷயமாகத் தெரிவிக்குபபோது "பிருத்தானிய ஆகாயவிமானங்கள் வெடிகுண்டு பெய்தன. அதனுல் எங்களுக்கு ஒரு சேதமுமில்லை; புதைத்திறாகிய வள்ளமொன்று மாத்திரம் கடலுள் அமிழ்ந்திவிட்டது.

### ஹெங்கேரிய எல்லைப் புறத்தில் ஜர்மனிய சைநியம்

ஜர்மனிய சைநியம் ஹெங்கேரிய எல்லைப்புறத்தில் வந்து திரண்டு நிற்கின்றன என அறியக்கிடக்கின்றதாம்.

### ருஷிய-பின்லன்ட் யுத்தம் பின்லண்டினர்

இதுவரையும் நடந்த யுத்தத்திலே பின்லண்டினர் 67 பேர் மாண்டனராம். 360 பேர் வரையிற் காயமடைந்தனராம்.

### சர்வதேச சங்கத்திற்கு முறையிடுதல்

ருஷியர் தங்கட்குச் செய்யும் அநியாயத்தைக் காக்கும்படி பின்லன்ட் அதிகாரிகள் சர்வதேச சங்கத்தினர்க்கு இப்பொழுது முறையிட்டனர். இந்த டிசெம்பர் மீ 11உ மேற்படி சங்கத்தினர் பின்லன்டினரின் முறையீட்டைப்பற்றிச் சபைகூட்டி யோசிக்கப்போகின்றர்களாம்.

### பின்லண்டினர் குடியெழும்புகின்றனர்

அதிகாரிகள் கட்டளைப்படி பின்லன்டின் பிரதான பட்டினங்களிலுள்ள சனங்கள் தம் வீடுவாசல்களை விடுத்துக் குடியெழும்பி நாட்டுப்புறத்திற்கு ஒதுக்கிடக் கெடுகின்றர்களாம்.

பின்லன்டினர் தம் நாட்டின்மேற் சுற்றித்திரிந்து வெடிகுண்டிட்ட ருஷிய ஆகாயவிமானங்களுட் சிலவற்றைச் சுட்டுக் கீழே இறங்கச்செய்தனர்; இப்படிக் கீழே வந்த ஆகாய விமானங்களுள் ஒன்றின் தமனி ருஷிய பெண்ணுகக் காணப்பட்டனளாம்.

இதற்கிடையில் பின்லன்டினர் ஸோவியற் ருஷியருடன் சமாதானம் பேசிக்கொள்வதற்கு முயற்சிசெய்கின்றனவும வதந்திபிறக்கின்றது.

பின்லன்டின் தலைநகரிலிருந்த பிருத்தானிய அமெரிக்க ஜர்மனிய பிரதிநிதிகள் அந்நகரைவிட்டுத் தம் நாடுகளுக்கு மீளுகின்றர்களாம்.

### பாரிய பிருத்தானியகப்பல் தாக்கிக் கடலுள் அமிழ்த்தப்பட்டது

4—12—39

டொறிக்ஸ்ரார் எனப்படும் 1000 தொன்கொண்ட பிருத்தானிய வியாபாரக்கப்பல் ஜர்மனியகப்பலால் தாக்கிக் கடலுள் அமிழ்த்தப்பட்டதாம். அமிழ்த்தப்பட்ட இடம் தென் அத்திலாந்திக்கடலாம்.

### ஜர்மனிய காவற்கப்பல் கடலுள் மூழ்கியது

லாண்ஜிலன்ட் நீயிற் சாதாரணமான ஜர்மனிய காவற்கப்பலொன்று வெடி சுரங்கத்தில் முட்டிக் கடலுள் மூழ்கியதாம்.

### பிருத்தானியகப்பல் நீரில் அமிழ்ந்தியது

எஸ்க்டெனியென்னும் 3829 தொன்கொண்ட லண்டன் கப்பல் பகைவர் இட்ட வெடிகுண்டுச் சுரங்கத்தில் அகப்பட்டுக் கடலுள் அமிழ்ந்தியது ஹாம்ஸ் ரர்கியென்னும் 2160 தொன்கொண்ட இன்னுமொரு பிருத்தானிய கப்பல் மோதுண்டு மாண்டதாம்.

### சுவிடின்கப்பல் மாண்டது

ரட்டல்வ் என்னும் சுவிடின் கப்பல் பிருத்தானிய கடற்கரையில் வெடிகுண்டுச் சுரங்கத்திலகப்பட்டு மாண்டுபோனதாம்.

# வேலைக்காரனோடு சென்ற பெண்

## பெண்ணின் தாய் கூறிய சாட்சியம்

டிசம்பர் 5—

சண்டிருப்பாயில் வசிக்கும் பொன்னம்பலத்தின் மகளாகிய 16 வயசுக்குட்பட்ட தங்கம்மா என்பவளைச் சோரமாக அழைத்துச்சென்றதாகக் குற்றஞ்சாட்டி வேலைக்காரனாகிய வேலு என்பவன்மீது தொடர்ந்த வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் மீளவும் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

செல்லம்மா மற்றுமொருமுறை விசாரிக்கப்பட்டபோது கூறியதாவது:-

எனக்கு இரண்டு பெண்குழந்தைகள் இருந்தன. இந்தக்கோட்டிற்கு வந்த தங்கம் என்பவளே அவர்களுள் இளையவள். மற்றக் குழந்தை 1, 1½வயதில் இறந்துவிட்டது. முதலாங்குழந்தை பிறந்து 2அல்லது 3 வருஷங்களின்பின் 2ம் குழந்தை பிறந்தது. முதலாவது குழந்தை என் வீட்டிலேயே பிறந்தது. முதலாவது குழந்தை இறந்து 1, 1½ வருஷத்தின்பின்னரே 2வது குழந்தை பிறந்தது. 2வது பிரசவத்தின்போது எனக்கு நோயுண்டாயிற்று. நான் இணுவில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டேன். அங்கேதான் குழந்தை பிறந்தது. அந்தக்குழந்தையின்பெயர் தங்கம்மா. முதலாவது குழந்தைக்கும் தங்கம்மா என்றே பெயர் வைத்தோம். பிறப்புக்கொப்பி வாசிக்கப்பட்டபோது சாக்ஷி அப்பிறப்புக்கொப்பி முதலாங்குழந்தையுடையதோ இரண்டாங் குழந்தையுடையதோ என்று என்னுற் சொல்ல முடியாது என்று கூறினர். 1-ம் குழந்தை தன்வீட்டிலேயே பிறந்து இறந்தபின் சண்டிருப்பாயிலேயே புதைக்கப்பட்டது என்றும் அப்போது தன் புருஷன் தன்னோடிருந்தமையால் அக்குழந்தையின் இறப்பு பதியப்பட்டதோ அல்லவோ என்று தனக்குத்தெரியாது என்றும் சொன்னர்.

நீதிபதி எதிரியை 250 ரூபாச் சொந்தப்பிணையில் விட்டு மேல்விசாரணையை 13-12-39ம் திகதிக்குத் தவணையிட்டார். க-தி

## சயிக்கிள் திருடனுக்கு மறியற் றண்டனை

டிச 5—

சிதாரியில வசிக்கும் சின்னையா செல்லக்கண்டு என்பவன் நிக்கிலாப்பிள்ளை மனுவல்பிள்ளை என்பவருடைய ஐம்பது ரூபா பெறுமதியான சயிக்கிளைத் திருடினதாயும் சந்தியாப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளையின் பத்துரூபா பெறுமதியான மற்றொரு சயிக்கிளையும் களவாடினதாயும் குற்றஞ்சாட்டப்பட்டவழக்குகளில் எதிரி நீதிபதி திரு. E. V. R. சமரவிக்கிரம முன்னிலையில் குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி முதலாம் குற்றச்சாட்டிற்கு 4மாதக் கடூழியமறியற் றண்டனையும் இரண்டாம் குற்றச்சாட்டிற்கு இரண்டுமாதக் கடூழிய மறியற்றண்டனையும் விதித்தார். க-தி

## பாலாவியில் திருட்டு

டிச 5—

பூநகரி டிஸ்திறிக்கைச் சேர்ந்த பாலாவி என்னுமிடத்தில் வசிக்கும் செல்லப்பா தம்பிப்பிள்ளை என்பவருடைய வீட்டைப் பிரித்து யாரோ சில கள்வர் உட்புகுந்து 35 ரூபா பெறுமதியான ஒரு துப்பாக்கியையும் மருந்தையும் காசு 12 ரூபா 27 சதத்தையும் களவாடியதாக அவ்வூர் மணியகாரனுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. க-தி

## கத்திக்குத்து வழக்கில் எதிரிக்கு 3 மாதம்

டிச 5

தல்லாலையில் வசிக்கும் செல்லையா அருளப்பு என்பவன் அவ்வூர் ஜோன் அந்தோனிப்பிள்ளை என்பவனுக்குக் கத்தியாற் குத்திக் காயமுண்டாக்கியதாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி திரு. E.V.R. சமரவிக்கிரம முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின் பின், நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக்கண்டு மூன்றுமாதக் கடூழிய மறியற்றண்டனை விதித்தார். க-தி

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## இந்துவாலிபர்சங்க 23வது வருடாந்தவிழா

மேற்படி விழா கார்த்திகை மாதம் 18-ந் திகதி (3-12-39) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் குருபூசைத் தினத்தன்று இந்துக்கல்லூரி மேல மாட மண்டபத்தில இச்சங்கத் தலைவரின் அக்கிராசனத்தின் கீழ் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

சாயந்தரம் 4 மணியளவில் கீழ் மண்டபத்தில் நடராசப் பெருமானுக்குப் பூசை நடந்தது. விபூதி பிரசாதம முதலியன வழங்கப்பட்டபின் 5 மணியளவில் மேல் மண்டபத்தில் சங்கத் தலைவரின் அக்கிராசனத்தின் கீழ் ஓர் பகிரங்கக் கூட்டம் கூடியது. அத்தருணம் ஆறுமுகநாவலர் பேரில் ஓர் பாமாலை பிரமஸ்ரீ செ. சிவசுப்பிரமணியமவர்களால் பாடப்பட்டது. காரிய தரிசியின் அறிக்கைப் பத்திரம் வாசித்து முடிந்ததும் கல்லூரி மாணவர்களால் ஓர் இசைவிருந்து அளிக்கப்பட்டது. பின் திருவாளர் A. R. சண்முகரத்தினம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் அவர்களால "பழங்கதை" என்னும் விடயம்பற்றியும், ஸ்ரீமத் சிவப்பிரகாச யோகீஸ்வரரவர்கள் "தேசசேவை" யென்னும் விடயம் பற்றியும வியாகரண மகோபாத்தியாய பிரம்மஸ்ரீ வை. இராமசாமி சர்மா அவர்கள் "ஆறுமுகநாவலர்" என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவுகள் நடாத்தினர்கள். தமிழ் உபந்நியாசத் தேர்ச்சியில் முதற்பரிசில் பெற்றவராகிய சிரஞ்சீவி வ. சுப்பிரமணியமவர்கள் "நாவலர் நம் நாட்டுக்கு ஆற்றிய தொண்டு" என்னும் விஷயத்திலும் ஆங்கில உபந்நியாசத் தேர்ச்சியில் முதற் பரிசில் பெற்றவராகிய சிரஞ்சீவி M. A. அலிவ் அவர்கள் "The Goal of Life" என்னும் விஷயத்திலும் முறையே தமிழிலும் ஆங்கிலத்திலும் உபந்நியாசம் செய்தார்கள். பின் மேற்படி கூறிய இரு உபந்நியாசத் தேர்ச்சியிலும் திறமை பெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கப்பட்டன.

தமிழ்ப்பரிசிற் றேர்ச்சி

1-ம் பரிசு திரு. V. சுப்பிரமணியம்
2-ம் ,, ,, S சேனாதிராசா

ஆங்கிலப் பரிசிற் றேர்ச்சி

1-ம் பரிசு திரு M. A. Aliph
2-ம் ,, ,, K. இலங்கைநாதா

பின், திரு. சே. வேலாயுதபிள்ளையவர்களால சபைக்கு நன்றி கூறப்பட்டதும் கூட்டம் தேவார பாராயணத்துடன் பூர்த்தியாயிற்று.

—கடித

## விவாகம்

சின்னத்தம்பி—லீலாவதி

வழக்கறிஞர் திரு. R. R. நல்லையா அவர்களின் புதல்வி திருவளர் செல்வி லீலாவதிக்கும் முல்லைத்தீவுப் பெரிய டாக்குத்தர் திருவளர் செல்வன் சின்னத்தம்பி அவர்களுக்கும் நேற்றுக்காலை 10 மணியளவில் வண்ணார்பண்ணையிலுள்ள அதிகார் M. S. இராமலிங்கம் அவர்களின் இல்லமாகிய "சொர்ணகிரி"யில் விவாகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் நீடுவாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

## சரவணைச் சைவ அநாதைப் பெண்பிள்ளைகளின் நிதி

| | ரூ | ச |
|---|---|---|
| முன்பெற்றுக்கொண்ட தொகை | 465 | 25 |
| திரு. கா. இரத்தினம் அவர்கள் உடுப்பிட்டியார் கொழும்பு | 2 | 00 |
| திரு. K. முருகேசு அவர்களும் சிநேகிதரும் கோலாலம்பூர் | 75 | 00 |
| மொத்தம் | 542 | 25 |

மு. மயில்வாகனம்
யா. இ. க.
7-12-39

# உலகம் பலவிதக் கதை

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

மகிழ்வித்தாயாமே! அப்படிச் செய்த நீ இப்பொழுது என்னைத் தன்னந்தனியே நின்று கலங்க விட்டுப் பார்த்துக் கொண்டிருக்கின்றயே! இதுவோ நின்கருணை! சிறுமானேந்தும் பெருமானே! தாவிப்படரக் கொழுகொம்பில்லாத தனிக்கொடிபோற் பாவி பதைக்கின்றேனே! காலனை உதைத்து மார்க்கண்டேயரைக் காத்த கருணைநிதியே! இந்த வேளையில் என்னையுங் கடைக்கணிக்க வொண்ணுதா? வந்தி யென்னும் மூதாட்டிக்காக மண்சுமந்து அருள்புரிந்த சொக்கலிங்கா, கதியற்றவளாகிய என்னைப் பாதுகாத்தல் உன்கடனல்லவோ? மருகற்பெருமான் இடப்பாகத்தில் இருக்கும்தாயே! ஈசுவரி, உனக்கும் கருணையில்லையா? நீ என் தாயல்லவா? நான் உன் சேயல்லவா? பொல்லாத சேயெனில தாய் தள்ளல் நீதியோ! புகலிடம் பிறிதுமுண்டோ? பெற்ற தாய்க்குப் பெண் குழந்தையிற பற்றதிகமென்று சொல்லுவார்களே! அது பொய்யா? காஞ்சித் தலத்திலிருந்துகொண்டு முப்பத்திரண்டறங்களையுஞ் செய்யுங் காமாட்சித்தாய் நீயல்லவோ? ஏழையாகிய என்னைக் காத்தல் அந்த முப்பத்திரண்டு அறங்களுள் ஒன்றகாதா? நானொருத்தி படுந்துயரை உன் இறையவருக்கு நீ முறையிடவொண்ணுதா? அம்மையே, அப்பா, இந்த ஆபத்தில் ஏழையடியவளாகிய எனக்கு நீங்கள் திருவருள் புரியாதொழியின் நான் வேறென்ன செய்யமுடியும், உங்கள் சந்நிதானத்தில் என னுயிரை விடுவேன் ......" என்று மருகற்பெருமானுக்கும் பிராட்டியார்க்கும் முறையிட்டுக் கதறினுள்.

### முறையிட்டார் குறை தீர்க்கும் முழுமுதற் கடவுள்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், அந்தத் திருத்தலத்துள்ள ஒரு திருமடத்திற் சிலநாட்களாக எழுந்தருளியிருந்தவர், திருமருகற்பெருமானைப் புலரிக்காலப் பூசையில் தரிசிக்கும்படி அடியார் கூட்டத்துடன் புறப்பட்டு வந்தருளும்போது இக்கன்னிகையின் ஓலம் அவருடைய திருச்செவியிலும் பட்டது. பட்டமாத்திரத்தே ஆளுடைய பிள்ளையார் அடியார்களுடன ஆங்குச் சென்றருளினர். ஆடவன் இறந்துகிடக்க, அவனைத் தீண்டாது ஒருமங்கை அயலேயிருந்து கதறுவதையும் வருந்துவதையும் பிள்ளையார் அவதானித்தார். சஞ்சலப்படும் அவ்வணிகமகளின் சமீபத்திற் சென்றருளி "ஏ அம்மா! நீ அழாதே, வருந்தாதே, நீயார்? மாண்டுகிடக்கும் இந்த மனுஷன்யார்? நீவிர் எங்குள்ளீர்? இங்கு வந்த விடத்தில் நேர்ந்த ஆபத்தென்ன? சொல்லுதி, சஞ்சலப்படாதே" என்று வினவியருளினர். பிள்ளையாரைத் தரிசித்த மாத்திரத்தே தன் கவலையிற் பாதியொழிந்தவளாகிய அக்கன்னிகை அவருடைய திருவாக்கைக் கேட்டவுடன் தன் சஞ்சலம் முழுவதும் நீங்கியவென நினைத்தாளாய்ஓடிவந்து அவருடைய திருவடிகளிற் பஞ்சாங்கமாக விழுந்து வணங்கியெழுந்து கும்பிட்டு ஒருபுறத்தே மயிலெனஒதுங்கிநின்று விண்ணப்பஞ் செய்கின்றள்.

"முருகக் கடவுள்போல் என் முன் வந்தருளிய மூர்த்தியே, எங்கள் ஊர் வைப்பூர் எனப்படும்; நாங்கள் சாதியில் வைசியர், என்பிதாவின் பெயர் தாமன்; அவருக்கு நாங்கள் ஐவர் புதல்வியர்; இங்கே செத்துக்கிடப்பவர் எங்கள் தகப்பனுக்குச் சொந்த மருகராயுள்ளவர்; தந்தையார் எனது தமக்கையர் நால்வருள் ஒருவரையேனும் இவருக்குக் கல்யாணஞ் செய்து கொடாமல் ஏமாற்றிவிட்டார்; அதனுல் இவர் பெரிதும் வருந்துவதைக்கண்டும், அப்பர் இவரை வஞ்சித்தாரென்பதை யெண்ணியும் நானுகவே இவருடன் என் பெற்றுர் அறியாதவண்ணம் புறப்பட்டுக் கூடிக்கொண்டு இவருடைய சொந்த ஊருக்குப் போகும் மார்க்கத்தில் இராத் தங்கிப்போகும் வண்ணம் இந்தத் திருமடத்திலே வந்து தங்கினேம்; இவரைப் பாம்பு தீண்ட இவர் மாண்டார்; சுவாமீ, பெண்பேதை, என்செய்வேன்! எனக்குப் புகலிடமில்லை! இந்தச் சமையத்தில் எங்கள் குலதெய்வம்போலச் சுவாமீ! நீர்இங்கே எழுந்தருளினீர்; ஏழையாகிய எனக்கு வந்த ஆபத்தைக் காத்தருளுவீர்" என்று மீளவும் அக்கன்னிகை சம்பந்த சுவாமிகள் திருப்பாதங்களில் விழுந்து வணங்கினுள்.

### "உடையாய் தகுமோ? இவளுள் மெலிவே"

"எமதிறைவர் திருவிளையாட்டிருந்தபடி யென்னை"யெனத் திருவுளத்திற் சிந்தித்து ஆளுடைய பிள்ளையார் அப்பெண்ணுக்கு அபயங்கொடுத்து, மருகற்பெருமான் திருவருளையிரந்து:

[ திருச்சிற்றம்பலம் ]

"சடையாயெனுமால்சரணீயெனுமால்
விடையாயெனுமால்வெருவாவிழுமால்
மடையார்குவளைமலரும்மருகல்
உடையாய்தகுமோஇவளுள்மெலிவே"

என்பதை முதலாகவுடைய தேவாரப் பதிகத்தைப்பாடியருளினர்; பதிகத்தைப் பாடி முடித்தமாத்திரத்தே அரவந்தீண்டிஇறந்த வணிகன், துயின்றவன் விழித்தெழுவான்போல எழுந்து நாயனருடைய திருவடிகளில் விழுந்து வணங்கியெழுந்து ஒதுங்கி நின்றுன். அக்கன்னிகையும் நாயனரையும் திருமருகற் பெருமானையும் வணங்கி மகிழ்ந்து நின்றுள்; அங்குநின்ற அடியாரெல்லாரும் அற்புதமடைந்தாராய் ஆளுடைய பிள்ளையாரையும் மருகற்பெருமானையும் கும்பிட்டு இறைவருடைய திருவருள் மகத்துவத்தையும் சிவனடியாரின் பத்தித் திறத்தையும் வியந்து பாராட்டி நின்றுர்கள். எங்கள் திருஞானசம்பந்தப் பெருந்தகையார் உடனே அவ்வணிகனுக்கும் கன்னிகைக்கும் அங்குள்ள அளவிறந்த அடியார் சமுகத்தில் மருகற் பெருமானர் சந்நிதியில திருமணச் சடங்குகளைச் செய்வித்து அத் தம்பதிகட்குப் பூரண அநுக்கிரகஞ் செய்து அவரூருக்குச் செல்ல விடைகொடுத்தருளினர்; அவர்களும் தம் ஊரிற் சென்று இனிது வாழ்ந்தார்கள் எனப் பெரியபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது; ஆதலால அம்மா, அந்தப் பெருமான் எங்களுக்கும் ஒரு வழி காட்டுவார்தானே, நீங்கள் இதையிட்டுக் கவலைப்படவேண்டாம்" என்று ஞானம்பிகை தன் தாய்க்குச் சொல்லி முடித்தாள்.

(வரும்)

—0—

யாழ்ப்பாணம்

**சைவப்பிரகாச யந்திரசாலைப் பிரசுரங்கள்**

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் வெளியிட்டுள்ள புஸ்தகங்கள், தினவரவுடாப்பு, பாடக்குறிப்புப்புத்தகம் முதலியவைகளெல்லாம், இச்சாதனலயத்தில் தொகையாகவும் சில்லறையாகவும் தக்க "கம்மிஷனுடன்" கொடுக்கப்படும். எங்கள் பிரசுரங்களில் புத்தக வியாபாரிகள் ஏதும் புஸ்தகங்கள் டாப்பு முதலியவைகள் இல்லையென்று சொன்னுல் நேரே இங்கு வந்து பெற்றுக் கொள்ளலாம். யங்களுடைய தினவரவு டாப்பு, பாடக்குறிப்புப் புஸ்தகம் எழுத்துறுப்புக் கொப்பி ஆகிய இவைகள் போதியளவு முடித்துவைக்கப்பட்டிருக்கின்றன.

எங்கள் விபரமான புத்தகக் கிரயக் குறிப்புவேண்டுமானுல் தெரிவிக்கவும்.

வண்ணார்பண்ணை
6-12-39

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை.

# கோட்டில்மெழுகினுற் செய்த மனித உருவம்

## மந்திரவாதியைப் பில்லி சூனியத்தாற் கொல்ல முயற்சியா?

எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்

அவிசாவளை, டிச 1

எரன் சிங்கோ என்ற மந்திரவாதியின் உயிருக்கு ஆபத்து உண்டுபண்ண முயற்சித்ததாக, கொஸ்காமை வாசிகளான ஒரு பஸ் கொம்பனியின் சொந்தக்காரர் டப்ளியூ. டி. அந்தோனி, கே. ஜேமிஸ் சிங்கோ, முனியான் என்ற பி.கே. மெலிஸ் சிங்கோ, கால்பால் என்ற ஜோன் பெரேரா ஆகியோர்மீது அவிசாவளைப் பொலிஸ் உதவிச் சுப்பிறிண்டெண்ட் திரு. என் ஜி. டி. லொய்ஸாவாற் குற்றஞ்சாட்டப்பட்டுக் குறித்த எதிர்மனுதார்களிடமிருந்து நன்னடத்தைப்பிணை கோரி ஒருமனு தாக்கல் செய்யப்பட்டது.

இதுபற்றிய விசாரணை அவிசாவளை அடிஷனல் நீதிபதி கோட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொலிஸ் உதவிச் சுப்பிறிண்டெண்ட், தமது மனுவை ஆதரித்துச் சாட்சியமளிக்கும்போது மெழுகினுற் செய்யப்பட்ட ஒரு மனித உருவத்தைக் கோட்டாரிடம் காண்பித்து, இவ்வுருவத்தையொத்திருக்கும் மனிதனைக் கொல்லுவதற்கு ஒரு தோட்டத்தில் இது புதைக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டார்.

முதல் எதிர்மனுதார் தனது சாட்சியத்திற் குறிப்பிட்டதாவது:-

1937-ம் ஆண்டு செப்டம்பர்மாசம் எனது மகன் மைக்கேல் அசௌக்கியமடைந்திருந்தான். வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டும் எனது மகன் குணமடையவில்லை. பின்னர் நான் எரன்சிங்கோவை வரவழைத்தேன். அவனது மந்திரத்திற்குப்பின் குழந்தை குணமடைந்தது.

சென்ற ஆகஸ்ட்மாசம் எனது மகன் மீண்டும் அசௌக்கியமுற்றன். எனக்கு மந்திரங்கள்மீது அதிகநம்பிக்கையில்லையாதென்றுலும் எனது மகனுடைய சாதகத்தைப் பார்த்தபின்பு, எரன்சிங்கோவை மீண்டும் அணுகி, எனது குழந்தைக்கு மந்திரம் ஓதும்படி கேட்டுக்கொண்டேன்.

இதற்குக் கட்டணமாக ரூபாய் 500 கொடுப்பதாக நான்தெரிவித்தேன். ஆயின் எரன்சிங்கோ ரூபாய்1000 செலுத்தப்படவேண்டுமென்று வற்புறுத்திக்கேட்டதால் நான் அவனது உதவியை நாடுவதைக் கைவிட்டேன். அதன்பின்பு எனது குழந்தை இறந்துவிட்டது.

எரன்சிங்கோவைச் சுட்டுக் கொல்லுவதாக நான் பயமுறுத்தவுமில்லை, பில்லி சூனியத்தாலோ அல்லது வேறு வழியிலோ எரன் சிங்கோவின் உயிருக்கு ஆபத்தை விளைக்க நான் கருதவுமில்லை.

மேற்கொண்டு சில சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின்பு நீதிபதி எதிர் மனுதார் அனைவரையும் விடுதலை செய்தார்.

# வாலிபருக்கு மரண தண்டனை

## 65 வயதுக் கிழவரைக் கொலை செய்ததாக வழக்கு

களுத்துறை டிச 3

வட்டுவைப் பொலிஸ் எல்லைக்குட்பட்ட மொலிகொடையைச் சேர்ந்த சீடின் ரொட்ரிக்கோ என்னும் 27 வயதன்ன வாலிபர் கே. ஜேம்ஸ் பெரேரா என்னும் 65 வயதன்ன வயோதிகரை ஒரு கல்லால் அவரது தலையிலும் முகத்திலும் அடித்துக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு களுத்துறைக் குற்றவிசாரணைக்கோட்டில் வெள்ளிக்கிழமை முடிவடைந்தது.

வழக்காளி பக்கத்திற் கூறப்பட்டதாவது:-

எதிரி இறந்தவரை வழிமறித்துப் பணம் கொடுக்கும்படி கேட்டபொழுது இறந்தவர் பணமில்லையெனத் தெரிவித்தார். பின்னர் எதிரி இறந்தவரின்தொண்டைமீது ஒரு கத்தியை வைத்து அவரைக் கொலை செய்து விடுவதாகப் பயமுறுத்தினர். இறந்தவரோ பணம்வைக்கும் சிலேப்பையை எதிரியிடம் காட்டி அவருக்கு நம்பிக்கையுண்டுபண்ண முயற்சித்தார். ஆயின், எதிரி அதனுல் திருப்தியடையவில்லை. இந்நிலையில் எதிரி வயோதிகரைக் கல்லால் அடித்தார்.

விசாரணை முடிவில் எதிரி கொலைக் குற்றவாளியென ஜூரர்கள் ஏகமனதாக அபிப்பிராயம் தெரிவித்தனர். ஆகவே, நீதிபதி ஜூரர்களின் அபிப்பிராயத்தை அனுசரித்து எதிரிக்கு மரணதண்டனை விதித்தார்.




# கேரள வெப் சோப்

சருமத்திற்கு உற்சாகம் விளைக்கக் கூடிய உயர்தரமானது

அழகான பெண்களுக்குரிய சோப்

எங்கும் கிடைக்கும்

ஏஜென்ஸ்: தேவார் அன் கம்பனி, மெயின் ஸ்ரீட், கொழும்பு

Mis 159, 71-11-38—

## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுசவிலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, காசப்பு, லங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேற்சொல்லியவியாதிகள் குணமடைவதுடன் சூதகவாயு பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரைருத்தலுக்கு ரூபா 10 கால்ருத்தலுக்கு ரூபா5 தபாற்செலவுபிரத்தியேகம் சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிக்கு வீ. பீ சட்டம் இல்லாததனால் மூன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,

க. ஆறுமுகம்பிள்ளை

ஸ்ரீ. சிவஞான ஆரோக்கிய வைத்தியசாலை,
கீட்டிலக்கம்33 பழையவாடிரோட்டு,கோட்டைமுனை,மட்டக்களப்பு,சிலோன்.

(Y 14-6-39 to 31-12-39)

### தி மலாயன் டிரேடிங் கொம்பனி (சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச் சாமான்கள் சிமேந்து வகைகள் விற்பனவு செய்வோர்

பெரியகடை, யாழ்ப்பாணம்.

"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்

Y 50. 3-4-39 3-3-40


Nº 247


### விளம்பரம்.

இனும். இனும்.

கிரிஸ்மஸ் பண்டிகைக்கு பெஷலாய் தயார்செய்த மலையாளம் உயர்ந்த ஜவுளி திணுசுகள் கேட்லாக் இனும்.

மனேஜர், கிருஷ்ணவிலிங்பாக்டரி,
கோட்டார் P O. திருவிதாங்கூர்.
(Y. 188—6-11-39—5-11-40.)

வியாபாரத்திற்கழகு விளம்பரஞ்செய்தல் அதற்குகந்தது இந்துசாதனமே.

சுகபோகமான ஸ்நானத்திற்கு — ஸிப்ரா

டொயிலெற் சவர்க்காரம்



சிறந்தது எது என்று கண்டு பிடிக்கும் பொது ஜனங்களுக்கு இதுவரை எவரும் தர முன்வராத மிகச் சிறந்த சவர்க்காரம்;

சரீரத்தி லுள்ள தோலைச் சுத்த மாக்கு கின்றது; மென்மை யாக்கு கின்றது; வசமாகுந் தன்மையும் வசீகரமு மடையச் செய்கின்றது.

பெங்கால் கெமிக்கல் & பாம கோட்டிக்கல் லிமிற்றெட்

கல்கத்தா: பம்பாய்.

இலங்கை ஸோல் ஏஜண்டுகள்: தி யூனைற்றெட் ட்ரேடிங்கம்பெனி, தபாற்பெட்டி 377, கொழும்பு.

Mis159. 10-9-37—


## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டவிலைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் திரிகோணமலை 8ம் நெம்பர் சாகக்கடைவீதி வெற்றிவேலு சனசபை சிவப்பிரகாசபிள்ளை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1938ம் ஆண்டு 5ம் மாசம்

| இல. | தி. | ரூ | ச. | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| 6676 | 2 | 51 | | மூடிச்சக்குத்தியட்டியல் 1 |
| 6714 | 2 | 9 | 04 | மோதிரம் 1 |
| 6772 | 7 | 25 | 04 | தங்கக்காப்பு சோடி 1 பூ இ கொப்புசிமிக்கி சோடி 1 |
| 6782 | 8 | 25 | | மல்லிகை மொட்டுக் காப்பு 1 |
| 6788 | 8 | 10 | | குவைஅரைப்பவண் 1 |
| 6809 | 8 | 12 | | வெ பாதசரம் சோ.1 |
| 6813 | 8 | 15 | | இ கல் பதக்கம்1 பு இ |
| 6830 | 9 | 238 | | குண்டுச் சங்கிலி 1 கைச்சங்கிலி 2 ச இ மினுகாப்பு சோடி1 |
| 6838 | 9 | 9 | | வெ கல் காதோலை சோடி 1 |
| 6839 | 9 | 12 | | நீலக்கல் மோதிரம் 1 |
| 6860 | 9 | 8 | | இ கல் தோடு 1 |
| 6866 | 10 | 17 | | 1 கல் தோடு சோடி1 |
| 6884 | 10 | 12 | | சிகப்புக்கல் கடுக்கன் சோடி 1 |
| 6909 | 10 | 50 | | சிகப்புக்கல்காதோலை சோடி1 இ கல் டையன் மோதிரம் 2 அரும்பு மோதிரம் 1 |
| 6910 | 10 | 25 | | இ கல் கவுத்தோர் 2 |
| 6915 | 10 | 12 | | மோதிரம் 1 |
| 6993 | 15 | 25 | | சிறுசெட்டிச் சொறுசக்காப்பு 1 |
| 7023 | 17 | 16 | | வெகல் கொண்டைப் புரூச் |
| 7025 | 17 | 30 | | பீலிக்காப்பு 1 |
| 7076 | 21 | 12 | | பலவிதமணிக்கோர்1 மணி 38 |
| 7101 | 23 | 14 | | கைவிலங்கு 1 தண்டு 1 இ |
| 7102 | 23 | 6 | | கைவிலங்கு1 தண்டு 1 இ |
| 7149 | 25 | 8 | | வெ கல் கலாவரைக் குச்சு சோடி 1 |
| 7157 | 25 | 7 | | இடைகுரிசடம் 8 |
| 7168 | 27 | 40 | 04 | தங்கக்காப்பு சோடி1 பூ இ |
| 7218 | 30 | 6 | | வளையல் 5 |
| 6ம் மாசம் | | | | |
| 7286 | 1 | 55 | 04 | பூச்சங்கிலி 1 கொ இ |
| 7305 | 3 | 25 | | செடி வேலை செய்த அமெரிக்கன் 5டலர்1 |
| 7310 | 4 | 10 | | இ கல் காதோலை சோடி 1 |
| 7335 | 4 | 400 | | தங்கப்பவுண் 2உடன் முடிச்சுக் குத்தி சோடி 1 |
| 7352 | 5 | 40 | 04 | சிரசப்பூவுடன் 6 பட்டு மணி 1 |
| 7371 | 7 | 22 | 04 | பி சி பொன் கம்பிப்பூ அட்டியல் 1 |
| 7386 | 7 | 120 | | கூடுடன் குண்டுச்சங்கிலி 1 |
| 7389 | 7 | 8 | | 2பட்டுக்கைச்சங்கிலி1 |
| 7393 | 7 | 10 | | வெ குவை ½பவுண்1 |
| 7404 | 9 | 27 | | பொன்தாலிக்கொடி1 |
| 7411 | 9 | 100 | | சம்புராத வளையல் 2 |
| 7421 | 11 | 70 | | நெப்பின்காப்புசோடி 1 ச மு இ |
| 7432 | 11 | 12 | | வெ கல பெண்டன் 1 |
| 7436 | 11 | 30 | | சிறு முறுக்குக்காப்பு சோடி1 கல்புரூச்1 |
| 7443 | 11 | 40 | | நெப்பின்காப்பு 1 |
| 7448 | 11 | 30 | 04 | இருதயமுடன்சங்கி 1 |
| 7467 | 13 | 65 | | கொடிக்காப்பு சோ.1 |
| 7485 | 13 | 50 | | குரிசு புருத்தாலியுடன் முடிச்சுச்சங்.1 |
| 7511 | 15 | 10 | | வெ கல் காதோலை சோடி 1 |
| 7513 | 15 | 18 | 04 | மோதிரம் 1 |
| 7522 | 15 | 50 | | மல்லிகை மொட்டுக் காப்புச் சோடி 1 |
| 7534 | 15 | 9 | | ஆனைமயிர்க் கை விலங்கு 1 ச இ |
| 7573 | 18 | 6 | 50 | மோதிரம் 1 |
| 7600 | 20 | 50 | 04 | வெ கல் பெண்டன் 1 |
| 7628 | 20 | 6 | | சிறு திருகுபூ 1 |
| 7668 | 23 | 55 | | செடி வேலை செய்த ½ பவுணுடன் குண்டுச்சங்கிலி 1 |
| 7723 | 25 | 6 | | மணி 3 பின் 2 |
| 7742 | 27 | 15 | | தங்கக்காப்பு சோடி1 ச் இ |
| 7762 | 27 | 10 | | அரைப்பவுண் 1 |
| 7767 | 27 | 19 | | கு வை க பவுண் 1 |
| 7781 | 28 | 18 | | சவுக்கமணி 1க்கு மணி 20 |
| 7787 | 28 | 10 | | வெ கல் கலாவரை அருங்கோல் சோடி1 ச இ |
| 7791 | 28 | 12 | | சல் இ ஒப்பின் கடுக்கன் சோடி 1 ச இ |
| 7809 | 30 | 10 | 18 | கு வை ½பவுண் 1 |
| 7ம் மாசம் | | | | |
| 7849 | 2 | 18 | | மோதிரம் 1 |
| 7857 | 2 | 60 | | கைச்சங்கிலி 2 |
| 7866 | 2 | 15 | 04 | இ கல் பதக்கம் 1 டி இ மு வி |
| 7899 | 4 | 63 | | டி முடிச்சுக் குத்தி அட்டியல் 1 |
| 7913 | 6 | 10 | | வெ கல் காதோலை சோடி 1 |
| 7968 | 10 | 7 | | இ கல் பதக்கம் 1 டிம்மியும் க 1ம் இ |
| 7976 | 10 | 85 | | பெண்டனுடன் டைமன்ட்டியல் 1 |
| 7993 | 12 | 66 | | குண்டுச்சங்கிலி 1 |
| 8014 | 14 | 10 | | வெ பாதசரம் சோடி 1 குண்டு 1 இ |
| 8037 | 14 | 35 | | 5 பட்டு மணி 1 |
| 8038 | 14 | 30 | | குண்டுச்சங்கிலி 1 |
| 8055 | 16 | 10 | | தோடு சோடி 1 |
| 8094 | 16 | 10 | | மு இ பதசவுக்கமணி 1க்கு மணி 19 |
| 8097 | 17 | 50 | 04 | வெ.கல் பெண்டனுடன் செயினட்டியல் 1 |
| 8102 | 18 | 20 | | தங்கப்பவுண் 1 |
| 8113 | 18 | 15 | | மோதிரம் 1 |
| 8159 | 20 | 6 | | வெ கல் அருங்கோலை சோடி 1 சிவ மோதிரம் 1 |
| 8180 | 22 | 10 | | தாலித்தட்டு 6 குடம் 1 அருப்புத்தட்டு 2 |
| 8198 | 24 | 120 | | முடிச்சக்குத்தி கொடி1 சீ கல் மோதிர1 |
| 8200 | 24 | 6 | | வெ கல் வைரக்குச்சு சோடி 1 வெ கறினை சோடி 1 |
| 8233 | 26 | 15 | | ஒற்றைக் கல் தோடு சோடி 1 |
| 8237 | 27 | 16 | | தங்கக்காப்பு சோடி1 மு கு வெ கல் அருங்கோல் சோடி 1 |
| 8243 | 27 | 30 | | தங்கப்பவுண்1 அரைப்பவுண் 1 |
| 8263 | 27 | 80 | | சிகப்புக்கல் பதமுடிச்சக்குத்தியட்டியல் 1 |
| 8276 | 27 | 110 | | அறுக்குத்து 22 |
| 8297 | 27 | 9 | | இ கல் கலாவரைக் குச்சு சோடி 1 |
| 8302 | 27 | 30 | | சங்கிலி 1 |
| 8306 | 30 | 250 | | சிகப்புக்கல் மாலைப் பதக்கமுடன் 2பட்டு குண்டுச்சங்கிலி 1 |
| 8334 | 31 | 12 | 80 | வெகல் கடுக்கன் சோடி 1 ச இ |

விற்பனவு 1939ம்ஆண்டு மார்கழிமாசம் 19ந் திகதிக்குச் சரியான பிரமாதிவருடம் மார்கழிமாசம் 4ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறகிலாக மீதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

க. பாலசுப்பிரமணியம்,
ஏலத் தலைவர்.

திரிகோணமலை, 3-12-39.

(Mis. 204. 4 & 7-12-39.)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Thursday 7th December 1939.